Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 181 | புதன்கிழமை | வைகாசி 11 ஆம் நாள் 26 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 14 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில 68 யாழில் 40

யாழ்ப்பாணம், மே 26
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பகல் 422 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 62 பேருக்கும், நேற்றுமுன் 02 ➤

---

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட

# பி.சி.ஆர். சோதனைக்குரிய சீரான வழங்கல் இல்லை!

வடக்கு சுகாதாரத் திணைக்களம் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சோதனை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திலி ருந்து ஒழுங்கான வழங்கல்கள் இடம்பெறாமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக் காட்டப்படுகின்றது. 02 ➤

---

நேற்று நள்ளிரவு முதல்

## கிராம அலுவலர்கள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, மே 26
நாடு முழுவதும் நேற்று நள்ளிரவு முதல் கிராம அலுவலர்கள் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். 'கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் முறைமையிலுள்ள 02 ➤

---

## இலங்கைக்கு பயணத்தடை

விதித்தது அமெ.

கொழும்பு, மே 26
இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்று வேகமெடுத்துள்ள நிலையில், இலங்கைக்கு செல்வதைத் தவிர்க்கும்படி தன் நாட்டு மக்களைக் கோரியுள்ளது 02 ➤

---

## கிராம அலுவலரும், மனைவியும் விபத்தில் நேற்றிரவு உயிரிழப்பு!

கிளிநொச்சி, மே 26
பூநகரி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் கிராம அலுவலரும் அவரின் மனைவியும் விபத்தில் நேற்று உயிரிழந்தனர்.
கிராம அலுவலர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவருடைய மனைவி உயிராபத்தான நிலையில் மீட்கப்பட்டு 13 ➤

---

## பி.சி.ஆர். சோதனைக்குரிய இரசாயனங்கள் வந்தடைவு

இனி வழமைபோல் சோதனைகள்

யாழ்ப்பாணம், மே 26
யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனையில் பி.சி.ஆர். சோதனையை முன்னெடுப்பதற்குத் தேவையான இரசாயனப்பொருள்கள் நேற்று இரவு கிடைக்கப்பெற்றுள்ளன. 02 ➤

---



## வடக்கில் நேற்று கடும் காற்று

யாழ்ப்பாணம், மே 26
வடக்கு மாகாணத்தில் நேற்று கடும் காற்றுடனான காலநிலை காணப்பட்டது. குறிப்பாக கரையோரப் பகுதிகளில் காற்றின் தாக்கம் மிகையாக உணரப்பட்டது. 02 ➤

---

## உக்கிரமாகிறது 'யாஸ்!'

யாழ்ப்பாணம், மே 26
வங்காள விரிகுடாவின் கிழக்கு மத்திய பகுதியில் உருவாகியுள்ள, யாஸ் என்ற சூறாவளி தீவிரமான சூறாவளியாக மாற்ற 02 ➤

---

கொரோனா தடுப்பூசி

## அனைத்துக் குளறுபடிகளுக்கும் பொறுப்பேற்கவேண்டும் பவித்ரா

ரவி குமுதேஷ் அழுத்தம்

கொழும்பு, மே 26
கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி வழங்கலில் ஏற்பட்டுள்ள அனைத்துக் குளறுபடிகளுக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பொறுப்பேற்க வேண்டும் என்று மருத்துவ ஆய்வுகூட சேவை தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டி 02 ➤

---

## வாகனங்கள் மூலம் வீடுவீடாக அத்தியாவசியப் பொருள்கள்!

இராணுவத் தளபதி யோசனை
மக்கள் மீதும் கடும் அதிருப்தி

கொழும்பு, மே 26
அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவுக்கு பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு பதிலாக எதிர்காலத்தில் வாகனங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார். கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா. 02 ➤

---

## இலங்கையில் தீவிரவாத தாக்குதலுக்கு வாய்ப்பு!!

அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, மே 26
இலங்கையில் அடுத்துவரும் சில நாள்களில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்படக்கூடிய அபாயம் உள்ளது என்று அமெரிக்க 13 ➤

---

வாசகர்களே! உதயன் + சஞ்சீவி

ஞாயிறு உதயன் நாளிதழ்,
சஞ்சீவி வார இதழ்
என்பன

எதிர்வரும்
(31.05.2021)
திங்கட்கிழமை நாளிதழோடு
மேலதிகமாக வெளிவரும்

ஞாயிறு
உதயன் + சஞ்சீவி
40/=

திங்கள்
உதயன்-
ரூபா 30/=

முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பி.சி.ஆர்....

கடந்த சனிக்கிழமையின் பின்னர் மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சோதனைகள் நடத்தப்படுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சோதனை மேற்கொள்வதற்குரிய இரசாயனப் பொருள்கள் கிடைக்கப்பெறாமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு மே மாதமளவில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வந்ததையடுத்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதிகரித்த தொற்றாளர்களின் எண்ணிக்கையைச் சமாளிக்கும் வகையில், யாழ். போதனா மருத்துவமனையிலும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும் சமகாலத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. போதனா மருத்துவமனையின் பி.சி.ஆர். ஆய்வு கூடம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சில மாத காலங்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

மீண்டும் வடக்கு மாகாணத்துக்கான பரிசோதனைகளை மேற்கொள்வதில் யாழ். போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தின் இயலளவு போதாத காரணத்தால் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ். பல்கலைக்கழகம் ஆகியவை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதமளவில் மீண்டும் ஒருங்கிணைந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முடிவுசெய்யப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குரிய மாதிரிகளைப் பெற்று வழங்குவதும், பரிசோதனைக்குத் தேவையான இரசாயனங்கள் மற்றும் உள்ளீடுகளை வழங்குவதும் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பொறுப்பாகுமென உடன்பாடு எட்டப்பட்டது. தற்போது, யாழ். மருத்துவபீட ஆய்வு கூடத்தில் நாளொன்றுக்கு சுமார் 400க்கும் மேற்பட்ட மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கு ஏற்ற வசதிகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றுக்கான உள்ளீடுகளைக் கிரமமாக வழங்குவதற்கு வடக்கு மாகாண சுகாதாரத் திணக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சுகாதார அமைச்சின் நேரடிக் கட்டமைப்பினுள் வராத காரணத்தால், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களமே சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவில் இருந்து உள்ளீடுகளைப் பெற்று வழங்க முடியும். அதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரும் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் உரிய உள்ளீடுகளைப் பெற்றுத்தருவதில் அக்கறையீனமாகச் செயற்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ஓ,5)

## வடக்கில் 68

தினம் இரவு 165 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 6 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாண மாவட்டம்**

காரைநகர் பிரதேச மருத்துவமனையில் 10 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 6 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் என்று 40 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார் மாவட்டம்**

நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டம்**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்கும், மாங்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு பிரிவினர் 2 பேருக்கும் என்று 11 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும் என்று 8 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி மாவட்டம்**

தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் ஒருவரும், அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவரும் என்று இரண்டு பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-ஓ,5)

## கிராம அலுவலர்கள்...

முரண்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்' என்று கிராம அலுவலர்கள் சங்கத் தலைவர் சுமித் கொடிகார தெரிவித்துள்ளார். கொரோனாத் தடுப்பூசி ஏற்றலில் முன்னுரிமை ஒழுங்கு மீறப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். கொரோனாத் தடுப்பூசி விவகாரத்தால் சுகாதாரத் தரப்பின் பல்வேறு பகுதியினரும் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5,இ)

## இலங்கைக்கு...

அமெரிக்கா.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் அமெரிக்கா, இலங்கைக்கு பயணத் தடை விதித்தமை இங்கே கவனிக்கத்தக்கது. இலங்கைக்கான பயண எச்சரிக்கையை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் புதுப்பித்துள்ளது. அதில் தற்போதைய நிலையை கவனத்தில்கொண்டு 4ஆம் மட்ட எச்சரிக்கைக்குள் இலங்கையை அமெரிக்கா உள்ளடக்கியுள்ளது. (ம)

## பி.சி.ஆர்...

இந்தத் தகவலை போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார். பி.சி.ஆர். சோதனையை முன்னெடுப்பதற்கான ஓட்டோமட்ரிக் எக்ஸ்ராக் ரீஏஜென்ட் எனப்படும் ஒருவகை இரசாயனப் பதார்த்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் போதனா மருத்துவமனையின் சோதனைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இவை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவிலிருந்து இரசாயனப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை நேற்று இரவு போதனா மருத்துவமனைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இன்றைய தினத்திலிருந்து வழமையான அளவு சோதனைகள் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

## வடக்கில் நேற்று...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காரைநகர் பகுதியில் கணிசமான பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன. அங்கு சுமார் 25 குடும்பங்கள் இந்த கடும் காற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

காரைநகரில் குடும்பமொன்றின் வாழ்வாதாரத் தேவையை நிவர்த்தி செய்து வந்த கோழிக்கூடு பெருமளவு சேதத்தைச் சந்தித்துள்ளது. பல இடங்களில் மரங்கள் குடை சாய்ந்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல தோட்டங்களில் இருந்த வாழை மற்றும் பப்பாசி மரங்கள் அழிவைச் சந்தித்துள்ளன.

வவுனியா ஓலுமடு பகுதியில் இளம் விவசாயியொருவருக்குச் சொந்தமான சுமார் 600 பப்பாசி மரங்கள் அழிவடைந்துள்ளன. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் இவ்வாறான அழிவுகள் பதிவாகியுள்ளன. இது தொடர்பான விவரங்கள் சேர்க்கப்பட்டு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-110,26)

## உக்கிரமாகிறது....

மடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் வணிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவிக்கை யில்;

வங்கக் கடலில் உருவாகியுள்ள யாஸ் என்ற சூறாவளி படிப்படியாக ஆபத்தான சூறாவளியாக மாற்றம்பெற்று வருகின்றது. இதன் காரணமாக நாட்டில் பலத்த காற்று வீச ஆரம்பித்துள்ளது. புயல் காரணமாக நாட்டின் தென் மேற்கு பகுதியில் மழை பெய்யும். விசேடமாக மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் மழையுடனான காலநிலை நீடிக்கும் என்றுள்ளது. (ம)

## வாகனங்கள்...

நேற்றுப் பயணத்தடை தளர்த்தப்பட்டபோது மக்கள் நடந்துகொண்ட விதம் தொடர்பில் கடும் அதிருப்தி தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாடுகள் நேற்று தளர்த்தப்பட்டபோது அதிகமானவர்கள் நடந்துகொண்ட விதம் திருப்தி அளிக்கவில்லை. அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவுக்கு பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு பதிலாக எதிர்காலத்தில் வாகனங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்க வேண்டியிருக்கும்.

பயணக் கட்டுப்பாடு தளர்வின்போது வீட்டுக்கு அருகில் உள்ள கடையில் பொருள்களைக் கொள்வனவுசெய்ய வாய்ப்புவழங்கப்பட்ட போதும் அதனை சிலர் தவறாகப் பயன்படுத்தியுள்ளனர். பொதுமக்களின் இவ்வாறான நடத்தை நடைமுறை மிகவும் ஆபத்தான கட்டத்துக்குக்கொண்டு செல்ல வழிவகுக்கும் என்றார். (ம-22)

## அனைத்து....

ருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சுகாதார அமைச்சின் செயற்பாடுகள், கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நாட்டை முடக்குதல் ஆகிய விடயங்கள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன. அதன் விளைவுகளில் ஒன்றாக வசதிவாய்ப்புள்ளவர்களே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையொன்று உருவாகியுள்ளது.

அதன் காரணமாக அனைத்து வகையான மருத்துவப் பணியாளர்களும் இன்றைய தினத்திலிருந்து தொழிற்சங்க வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். அதற்குரிய தீர்வு வழங்கப்படாவிட்டால், நாளை (இன்று) முதல் பணியிலிருந்து விலகுவதுடன் நாளை மறுதினம் (நாளை) முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்குள் மாத்திரம் தடுப்பூசிகள் பகிரப்படல், தடுப்பூசிகள் விசேட வரப்பிரசாதமாக்கப்படல் மற்றும் சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்தவொரு பிரிவினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையாக இருத்தல் ஆகிய காரணங்களால் இந்த கடினமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

சுகாதாரத்துறைசார் தொழிற்சங்கங்களுடனான கலந்துரையாடல்களுக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதில்லை. சுகாதார அமைச்சரின் தீர்மானங்கள் முறையாக செயற்படுத்தப்படுவதில்லை.

கொரோனா வைரஸ் தொற்றை இனங்காண்பதற்கான பரிசோதனை ஆய்வு கூடங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலையேற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் வைத்திய அதிகாரிகளின் குடும்பங்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது உண்மையில் சுகாதார அமைச்சில் உள்ள குறைபாடாகும்.

ஏனெனில் இந்த வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ளது.

வரையறுக்கப்பட்ட தடுப்பூசிகளே உள்ள நிலையில், அதனை யாருக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கும்போது யாருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் உரிய செயற்றிட்டத்தைத் தயாரிக்க வேண்டும். தடுப்பூசிக்கான அவசியத்தேவையுடைய பல முன்னரங்க ஊழியர்கள் இருக்கின்றார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எனவே இந்தக் குழறுபடிகளுக்கும், மருத்துவப் பணியாளர்கள் வேலைநிறுத்தத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் அனைத்துக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியே பொறுப்புக்கூறவேண்டும்- என்றார். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார ஊழியர்களின் குடும்பத்தினருக்கு தடுப்பூசி

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் தெரிவிப்பு



**கொழும்பு, மே 26**

**அடையாளம் காணப்பட்ட முன்னணி சுகாதார ஊழியர்கள், வைத்தியர்கள் மற்றும் செவிலியர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இணை அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் நடத்தும் வேலைநிறுத்த போராட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, முன்னணி சுகாதார ஊழியர்களின் உறவினர்களுக்கு தடுப்பூசி போடுவதன் அவசியத்தை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அடையாளம் கண்டுள்ளார். முன்னணி சுகாதார ஊழியர்கள் தங்கள் நெருங்கிய உறவினர்கள் மூலம் கொரோனா தொற்றும் அபாயத்தில் இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தங்கள் உறவினர்களுக்கு மீதமுள்ள அஸ்ரா ஜெனகா தடுப்பூசிகளை வழங்கக்கோரி பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# 3 கோடி தடுப்பூசிகள் இலங்கைக்கு அவசியம்

## ரணில் வலியுறுத்து



கொழும்பு, மே 25

இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த 3 கோடி தடுப்பூசிகள் அவசியம் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

போதுமான கொரோனாத் தடுப்பூசிகளை இந்த வருடத்துக்குள் இலங்கைக்குக் கொண்டுவருவதில் அசௌகரியங்கள் உள்ளன. எனவே கொரோனாவைக் கட்டுப்படுத்த புதிதாகச் சிந்தித்து, புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். கடந்த நவம்பர் மாதம் 200 மில்லியன் தடுப்பூசிகளுக்கு முதலீடு செய்திருந்தால், தற்போது நாட்டில் தடுப்பூசிகளுக்கு பிரச்சினை இருந்திருக்காது. அந்நியச் செலாவணியை மாத்திரம் சிந்தித்து, இந்தியச் சுற்றலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்ததால், இலங்கையில் தொற்று வேகமாகப் பரவியது - என்றார். (எ-4)

# கொரோனா சோதனை நடவடிக்கை; தாதிய உத்தியோகத்தர்கள் விலகல்

கொழும்பு, மே 26

கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனை நடவடிக்கைகளிலிருந்து தாதிய உத்தியோகத்தர்கள் முற்றாக விலகியிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தாதிய உத்தியோகத்தர்கள் நேற்றையதினம் காலை 8 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை அடையாள போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் இரவு சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன், அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் பேச்சு நடத்தியது.

இதன்போது தாதிய உத்தியோகத்தர்களின் குடும்பத்தினருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு இணங்கியது. இதனையடுத்து நேற்று முன்னெடுக்க இருந்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இடர்காலக் கொடுப்பனவு மற்றும் கர்ப்பிணித் தாதியருக்கான விடுமுறை, பயணக் கட்டுப்பாட்டுக் காலங்களில் போக்குவரத்து வசதி ஆகியவை உள்ளிட்ட ஏனைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையால் நேற்று மாலையிலிருந்து பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனை நடவடிக்கைகளிலிருந்து தாதிய உத்தியோகத்தர்கள் விலகிக் கொள்வார்கள் என்று சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். (ஒ.5)

# இந்த ஆண்டு இறுதிக்குள் 70 வீதமானோருக்கு தடுப்பூசி



கொழும்பு, மே 26

இந்த ஆண்டின் இறுதிக்குள் நாட்டில் மொத்த சனத்தொகையில் 60 தொடக்கம் 70 வீதமானவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

சைனோஃபோர்ம் மற்றும் ஒக்ஸ்பேர்ட் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தல், கொவிட் தொற்றை தடுப்பதற்கு தடுப்பூசி ஏற்றுவதே தீர்வு எனும் நிலைமையின் கீழ், மிகவும் விரைவாக தேவையான தடுப்பூசிகளை ஏற்றுவதே தீர்வு எனும் நிலைமையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

14 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளைச் சீனாவில் இருந்து கொள்வனவுசெய்வதற்கும் ஒரு மில்லியன் ஒக்ஸ்பேர்ட் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)



# அடுத்த கட்ட தடுப்பூசி கண்டி மாவட்டத்துக்கு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு.மே 26

கண்டி மாவட்ட மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்புட்னிக் வி முதலாவது தடுப்பூசி முழுமையாக கண்டி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 50 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் விரைவில் நாட்டுக்குக் கிடைக்கும். மேலும் ஒரு மில்லியன் தடுப்பூசிகள் அடுத்த மாதம் முற் பகுதியில்

மேல் மாகாணத்துக்குப் பின்னர் கண்டி மாவட்டமே கூடுதலான ஆபத்தைச் சந்தித்துள்ளது. அதனால் கண்டி மாவட்ட மக்களுக்கு அடுத்த கட்டம் தடுப்பூசி செலுத்தப்படும்.

அதேவேளை நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிதி அரசிடம் உள்ளது. உலகம் முழுவதிலும் நிலவும் கேள்விக்கு ஏற்ப தடுப்பூசிகளை உற்பத்தி செய்யாமையே தடுப்பூசிகள் தாமதத்துக்குக் காரணம் - என்றார்.

# இணைந்த சுகாதார சேவையாளர்கள் கொழும்பில் நேற்று போராட்டம்

கொழும்பு, மே 26

கொழும்பு பொது மருத்துவமனை முன்பாக இணைந்த சுகாதார சேவையாளர்களால் நேற்று மதியம் அடையாள கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனாத் தடுப்பூசி ஏற்றலில் சுகாதாரத் தரப்பினரிடையே பாகுபாடு காட்டப்படக்

சுகாதார சேவையாளர்களின் குடும்பத்தினருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

பயணத் தடைக் காலத்தில் தமக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கையையும் இதன்போது அவர்கள் வலியுறுத்தினர்.

வருக்கும் உடனடியாக கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இணைந்த சுகாதார சேவையில் உள்ள வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இதன்போது முன்வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மகளிர் மோ. சைக்கிள் படையணி களமிறங்கியது!

**யாழ்ப்பாணம், மே 26**
**யாழ். நகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் மகளிர் மோட்டார் சைக்கிள் படையணியினரும் நேற்றுக் களத்தில் இறக்கப்**



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று அதிகாலை தளர்த்தப்பட்டது. பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். நகரப் பகுதியில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடினர். இதையடுத்து, அவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவத்தால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகரப் பகுதியில் சன நெரிசலைக் கட்டுப்படுத்தும் முகமாக இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வீதிகளில் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதே வேளை இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணியினரும் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். குறித்த நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் நெறிப்படுத்தலில் முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-26)







## பயணக் கட்டுப்பாடு தளர்வு; பொருள் கொள்வனவில் மக்கள்

திருமலை, மே 26
கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக நாடு முழுவதும் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு நேற்று அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டதை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முடக்கப்படாத பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்பலகாமம், முள்ளிப் பொத்தானை ஆகிய பகுதிகளில் கடைகள் திறக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டனர். இறுக்கமான முறையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் நடமாடினர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகமானவர்கள் காணப்பட்டனர்.

வங்கிகள் திறக்கப்பட்டு சேவைகள் இடம்பெற்றன. எனினும் பொதுப்போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. கிண்ணியாவில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப

## வாகனங்களில் பயணிப்போரை திருப்பி அனுப்பிய பொலிஸார்

வவுனியா, மே 26
வவுனியாவில் மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் மூலமாக நகருக்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று அதிகாலை முதல் தளர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து வவுனியா நகருக்குள் நுழையும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

இதனையடுத்து நகரின் முக்கிய பகுதிகளில் கடமையில் ஈடுபட்டு வரும் பொலிஸார், அத்தியாவசியத்தேவை கருதி மோட்டார் சைக்கிள்களில் செல்வோரைத் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் பயணிக்கும் அனைவரையும் திருப்பி அனுப்பினர். இதேவேளை வவுனியா நகரில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகள் மற்றும் மருந்தகங்கள், போன்றவை திறந்திருப்பதுடன் ஏனைய வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. (ப-110)





## யாழில் வீதித் தடைகளை அமைத்து பொலிஸ், படையினர் கண்காணிப்பு



யாழ்ப்பாணம், மே 26
நாடு முழுவதும், கடந்த வெள்ளிக்கிழமை அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை நேற்று அதிகாலை 4 மணிக்கு சில கட்டுப்பாடுகளுடன் தளர்ந்தப்பட்ட நிலையில், யாழ் நகரின் பிரதான வீதிகளில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கண்காணிப்புக்களில் ஈடுபட்டனர்.

யாழ். நகருக்குள் அவசர தேவை தவிர்ந்த ஏனைய வாகனங்கள் உள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட அதே வேளை வீதியால் செல்பவர்கள் மறிக்கப்பட்டு அவசர மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காகச் செல்பவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர். அத்தோடு யாழ். நகரின் ஒரு சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்ட அதே வேளை பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும் இருந்தன. (ப-20)



### அத்தியாவசியம் தவிர்ந்த

## வியாபார நிலையங்களை திறக்க மறுத்தது பொலிஸ்

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி நகரில் நேற்று திறக்கப்பட்ட வியாபார நிலையங்களில் அத்தியாவசிய வியாபார நிலையங்களைத் தவிர ஏனையவற்றை பொலிஸார் உடனடியாக மூடினர். கொவிட்-19 அசாதாரண சூழ் நிலை காரணமாக நாடு முழுவதும் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு நேற்று அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டதை அடுத்து காலை முதல் கிளிநொச்சியின் நகரில் பெரும்பாலான வியாபார நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

பொதுமக்களும் வழமைபோன்று நகருக்கு வந்தனர். ஆனால் அத்தியாவசியப் பொருள்களை விற்பனைசெய்யும் வியாபார நிலையங்களைத் தவிர ஏனையவற்றைத் திறப்பதற்கு தடை என அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக கிளிநொச்சியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (ப-214)

## 'மாஸ்க்' அணியாதவர்களை அள்ளிச் சென்றது பொலிஸ்

### வவுனியாவில் அதிரடி

வவுனியா, மே 26
வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் முகக் கவசம் அணியாமல் நின்றிருந்த நபர்களை பொலிஸார் வாகனத்தில் ஏற்றிச்சென்றனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று அதிகாலை தளர்த்தப்பட்டது. இதனையடுத்து வவுனியா நகருக்குள் நுளையும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. இதேவேளை வவுனியா நகரில் அத்தியவசிய உணவுப் பொருள்களை விற்பனைசெய்யும் கடைகள், மருந்தகங்கள் மற்றும் வங்கிகள் போன்றவை திறந்திருந்ததுடன், ஏனைய வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இதேவேளை திறந்திருக்கும் வியாபார நிலையங்களுக்கு நேற்றுக் களப் பயணம் செய்த பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் அங்கு முகக் கவசம் அணியாதவர்கள் மற்றும் நாடியில் முகக் கவசம், அணிந்தவர்களை பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்காக வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். (ப-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வரலாற்றுக் கடமை!

வடபகுதிக்குள் கொரோனா ஆழ ஊடுருவி விட்ட தென்பது அன்றாடம் வெளியிடப்படும் பி.சி.ஆர். முடிவுகளில் இருந்து தெளிவாகின்றது. நாளுக்குநாள் நாடும் சரி வடக்கு மாகாணமும் சரி கொரோனா என்னும் கொடும் அரக்கனின் பிடிக்குள் இறுகிக் கொண்டிருக்க, வளப்பற்றாக்குறை என்பது அந்த அரக்கன் தன் அசுர வேட்டையை மிக இலகுவாகவும், இலாவகமாகவும் செய்து முடிக்க ஏது நிலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

கொரோனாத் தொற்றை அடையாளப்படுத்தும் பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுதடைவதென்பது இதுகாலும் அவ்வப்போது இடம்பெற்றுவந்த நிலையில், தற்போது பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இரசாயனம் இல்லாமல் சமூக மட்டச் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அவசர தேவை கருதிய பி.சி.ஆர். சோதனைகளையே மேற்கொள்ளும் நிலைக்குள் வடக்கு மாகாணம் தள்ளப்பட்டுள்ளது. இத்தனைக்கும் வடக்கு மாகாணம் ஆபத்தான கட்டத்தில் உள்ளது, வடக்கில் தற்போதுதான் பி.சி.ஆர். சோதனைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று துறைசார் நிபுணர்கள் பலர் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளமை இங்கே கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது.

பி.சி.ஆர் இயந்திரங்களையும், அந்தச் சோதனைகளுக்குரிய மூலக்கூறுகளையும் தடையின்றி வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு. அதை இம்மியும் மறுத்துரைக்க முடியாது. ஆனால், இந்த விடயம் அரசுக்கு மட்டுமான பொறுப்பா என்ற கேள்வியையும் இங்கே எழுப்புவது தவிர்க்க முடியாததாகின்றது.


அரசு செய்யும்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற மெத்தனத்தில் குறைகளைக் கூறிக்கொண்டு இருக்க, இதுவொன்றும் வீதி அபிவிருத்திப் பணியோ அல்லது இன்னபல அபிவிருத்தித் திட்டங்களோ அல்ல. அரசியலும் அல்ல. எவ்வளவு தாமதிக்கின்றதோ, எவ்வளவுக்கெவ்வளவு மந்த நிலை ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பாதிப்பும் எமக்குத்தான் வந்து சேரும். இந்த அடிப்படைப் புரிதல் எம் அனைவருக்கும் இருத்தல் வேண்டும்.

எனின், எம்முன்னுள்ள கடமை என்ன?, தொட்டதுக்கெல்லாம் அரசை நம்பியிருக்காது அவ்வப்போது நாமும் சொந்த முயற்சியில் தன்னிச்சையாக சில செயற்பாடுகளை ஆற்ற வேண்டும். பி.சி.ஆர் .இயந்திரத்தையும் அந்தச் சோதனைக்குரிய மூலக்கூறுகளையும் வடக்குக்கு என்று தனியாகக் கொள்வனவுசெய்வதன் மூலம் மேற்சொன்ன சிக்கலைத் தவிர்க்கலாம். கொரோனாவுக்கு எதிரான போரை தங்குதடை இன்றி மேற்கொள்ளலாம்.

ஆடம்பரப் பண்டிகைகளுக்குத் தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளன. களியாட்டங்கள், கொண்டாட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றுக்குச் செலவிடும் தொகை தற்போது மீதம்தான். அந்தப் பணத்தை நாம் இந்த அரும்பெரும் பணியில் முதலிட முன்வர வேண்டும்.

வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகையை வடமாகாணத்துக்கு என்று சொந்தமாகப் பி.சி.ஆர். இயந்திரத்தையும், இன்னபல இரசாயனங்களையும் கொள்வனவுசெய்வதற்குச் செலவிட வேண்டும். அவர்களின் முதலீடுதான் இந்த வரலாற்றுக் கடமைக்கான அத்திபாரமாக அமையும். எவராவது இந்த உயரிய நோக்கை நோக்கி முதலாவது அடியை எடுத்து வைத்திட்டால்போதும், அதன் பின்னர் கொடையாளர்கள் பலர் தாமும் இந்தப் பணியில் பங்குதாரர்களாக மாறுவார்கள்.

இந்தப் பத்தியில் ஏலவே சொன்னதுபோன்று இதுவொரு வரலாற்றுக் கடமை. அந்தக் கடமையை நோக்கிய முதலாவது அடியை எவர் எடுத்து வைக்கப் போகின்றார் என்பதை மக்கள் நன்கு அவதானிக்கின்றனர்.



## யாழ். பல்கலையில் முதன் முறையாக உடற்கல்விப் பட்டப்படிப்பு ஆரம்பம்


### தமிழ் மாணவர்கள் சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மே 26**

**யாழ்.பல்கலைக்கழகத்தில் முதல் முறையாக 2020ஆம் ஆண்டில் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உடற்கல்வி பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். இச் சந்தர்ப்பத்தை விளையாட்டில் ஈடுபட்டு தம்மை அர்ப்பணித்த மாணவர்கள் தவற விடவேண்டாம் என்று உடற்கல்வி ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது: யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவால், தரம் உயர்த்தப்பட்ட உடற்கல்வி பட்டப்படிப்பை தமிழ் மாணவர்கள் கச்சிதமாகப் பயன்படுத்தி, அதை நழுவவிடாது விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு ஜி.சி.ஈ உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விளையாட்டில் சாதித்த சர்வதேச, தேசிய, மாகாண மாவட்ட சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வகைப்படுத்தி வழங்கப்படும். பொது உளச்சார்ப்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அடுத்த 'z' கோரின் அடிப்படையில் உள்வாங்கப்படுவர். இக் கற்கைநெறி ஆங்கில மொழி மூலம் நடைபெறும். எமது மாகாண மாணவர்கள் விண்ணப்பிப்பது குறைவாக இருக்குமானால் ஏனைய மாகாண மாணவர்களே நன்மையடைவர். இச் சந்தர்ப்பத்தை தமிழ் மாணவர்கள் தவறவிடக்கூடாது. ஏனெனில் இலங்கையிலே விளையாட்டுத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் போது அந்தந்த மாகாணத்தில் உள்ள உடற்கல்விப் பட்டதாரிகளைக் கொண்டே தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே போதுமான அளவு உடற்கல்விப் பட்டதாரிகள் இல்லாவிட்டால் வேறு மாகாணத்தவர்களே நியமிக்கப்படுவர். இதனைக் கருத்தில்கொண்டு விளையாட்டுச் சான்றிதழ் உள்ள அனைத்து மாணவர்களை யும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தல் வேண்டும் - என்றுள்ளது. (ப)

## கட்டுப்பாடுகளை மீறி இயங்கிய மதுசாலை கோப்பாயில் முற்றுகை



பயணத் தடை வேளையிலும், அரசின் கட்டுப்பாடுகளை மீறி சட்டவிரோதமாக இயங்கி வந்த பிரபல மதுபானசாலை ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பின் வீதியில் இயங்கிய மதுபானசாலையே நேற்று புலனாய்வுப் பிரிவினரால் முற்றுகையிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டது. இதன்போது சட்டவிரோதமாக மதுபான கொள்வனவுக்கு வந்த ஒருவர் மதுபானசாலை முகாமையாளர் மற்றும் மதுபானம் விற்பனை செய்தவர்கள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் விற்பனைக்கு தயாராக இருந்த [illegible] போத்தல் சாராயமும், 8 பியர் போத்தல்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த சட்டவிரோத மதுபானசாலையில் அதிக விலைக்கு மதுபான விற்பனை இடம்பெற்றது எனவும் மதுப்பிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மதுபானசாலை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் இயங்கி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகூடிய விலையில் மரக்கறி மன்னாரில் நேற்று விற்பனை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

**மன்னார், மே 26**

**பயணக் கட்டுப்பாடு நேற்றுக் காலை தளர்ப்பட்ட நிலையில், மன்னாரில் அதிகூடிய விலைக்கு மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்பட்டன என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டினர்.**



நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணி முதல் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 4 மணிக்கு தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருள்கள் விற்பனை மற்றும், மீன்,மரக்கறி விற்பனை நிலையங்கள் ஆகியவை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மன்னாரில் மக்கள் பொருள்களைக் கொள்வனவுசெய்ய வர்த்தக நிலையங்களை நாடியிருந்தனர். இந்த நிலையில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள சில மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகூடிய விலைக்கு மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்பட்டன என்று நுகர்வோர் விசனம் தெரிவித்தனர். குறிப்பிட்ட அளவு மரக்கறி விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளபோதும், ஒவ்வொரு மரக்கறி விற்பனை நிலையங்களிலும் நூற்றுக்கணக்கான நுகர்வோர் ஒரே நேரத்தில் பொருள்களைக் கொள்வனவுசெய்யச் சென்றதால் மரக்கறி வகைகள், சில விற்பனை நிலையங்களில் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மரக்கறி வகைகளைக் கட்டுப்பாட்டு விலையில் விற்பனைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மாவட்டச் செயலரைத் தொடர்புகொண்டு கேட்ட போது;

மன்னாரில் சில மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகூடிய விலைக்கு மரக்கறி விற்பனை செய்யப்படுகின்றன என்று முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. அவ்வாறான விற்பனை நிலையங்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மரக்கறிப் பொருள்களை கொள்வனவு செய்யச்சென்று வருவதற்கான பாஸ் இரத்துச் செய்யப்படும் என்று தெரிவித்தார். (ப-56)

## உயிரிழந்து 24 மணித்தியாலத்துக்குள் இறுதிச் சடங்கு செய்யவேண்டும்

### சாவ. சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

கொடிகாமம், மே 26

வீட்டில் நிகழும் சகல உயிரிழப்புக்களும் உடனடியாக கிராம அலுவலர், மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்து அவர்களின் வழிகாட்டலைப் பெற்று அதன் பிரகாரம் 24 மணி நேரத்தினுள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இறுதிச் சடங்கு செய்யப்படுதல் வேண்டும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

இறந்த உடலை கையாளும்போது மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் இருத்தல் அவசியம். வீட்டில் திடீரென இறப்பவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படும்போது கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகமாகப் பதிவாகி வருவதை பொதுமக்கள் அனைவரும் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும் என சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

## திருட்டுக் குற்றச்சாட்டு; சிக்கினர் இருவர்

கொடிகாமம், மே 26

நாவற்குழி பகுதியில் தொடர் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட, இருவர் அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப் பட்டுள்ளனர்.

நாவற்குழியில் பல வீடுகளில் ஆள்களில்லாத வேளைகளில் களவு மற்றும் வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்தன.

இச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பாதிக்கப்பட்டவர்களால் அடையாளப்படுத்தப்பட்டவர்களை, அந்தப் பகுதி இளைஞர்கள் தேடி வந்தனர்.

இந்த நிலையில். கைதடி பாலத்துக்கு அண்மையில் உள்ள வெளியில் வைத்து பொலிஸார் மற்றும் இளைஞர்கள் இணைந்து சம்பங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை மடக்கிப் பிடித்து கைதுசெய்தனர். (ப-159)

## 'சூம்' வகுப்புக்களால் பாதிக்கப்படும் மாணவர்கள்: மாற்றுத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்

### சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

வவுனியா,மே 26

தொடர்சியாக 2 தொடக்கம் 3 மணி நேரம் 'சூம்' வகுப்புக்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு கண் பார்வை குறைபாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு சமூக வலைத்தளங்கள் மற்றும் "சூம்" செயலிகள் ஊடாக மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பல மணி நேரமாக கைத்தொலைபேசிகள் மற்றும் கணினிகளுக்கு முன்பாக இருப்பதால் மாணவர்களுக்கு பார்வைப் பிரச்சனை ஏற்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாடசாலையில் 40 நிமிடங்களே ஒரு பாடவேளையாக உள்ளபோதிலும் 'சூம்' வகுப்புகளில் தொடர்ச்சியாக இரண்டு மணிநேரமாக கற்பிக்கப்படுவதால் மாணவர்களின் கிரகிக்கும் தன்மை அற்றுப்போகும் வாய்ப்புக்கள் உள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில வீடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் கற்கும்போது அவர்களுக்கு ஒரே நேரத்தில் கற்றல் செயற்பாடுகள் 'சூம்' செயலியூடாக இடம்பெறுமாயின் தனித்தனியாக கைத்தொலைபேசிகள் அல்லது கணினிகளை கொள்வனவுசெய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க பயிற்சி செயற்பாடுகளில் ஆசிரியர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-110)

## கிராமங்கள்தோறும் குழுக்கள் அமைத்து கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம்

### மன். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், மே 6

கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை மிகத் தீவிரமாகத் தாக்கி வரும் இந்த நேரத்தில், கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்களின் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெவித்தார்


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதைய சூழ்நிலையில் எங்களுடைய மாவட்டத்தில் நோயாளர்களுக்கு என ஏற்படுத்த இருக்கின்ற தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் 80 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 15 பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனையவர்கள் வவுனியா மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

தார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையின்படி அவர்கள் அனேகமாக இந்த வாரம் தங்களுடைய சிகிச்சை நிறைவுசெய்து தங்களுடைய வீடுகளுக்குச் செல்வார்கள்.

எங்களுடைய மாவட்டத்திலிருந்து அத்தியாவசிய தேவைகளின் பொருட்டு வெளி மாவட்டங்களுக்கு மீன், மரக்கறி, நெல் மற்றும் அரிசி போன்ற அத்தியாவசிய பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், கொண்டு வருவதற்கும் அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்கின்றோம்.

அதனடிப்படையில் அத்தியாவசியப் பொருள்கள், அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்வதில் மக்களுக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை. அதேபோன்று ஒவ்வொரு கிராமங்களிலும் நடமாடும் சேவையின் மூலம் மக்க



சேவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். அரசின் பணிப்புக்கிணங்க கிராமங்கள்தோறும் கொரோனா தொடர்பான கிராமியக் குழுக்களை அமைத்து, அதன்மூலம் கிராமத்தினுடைய இந்தக் காலப்பகுதிக்கான தேவைகளைப் பூர்த்திசெய்யவும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கொரோனா தொடர்பான பிரச்சனை களைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இதனை பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் தலைமை தாங்கி நடத்துவர் - என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் தொடரும் மணல், மரக் கடத்தல்

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, மே 26**
**முல்லைத்தீவின் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் மற்றும் பழையமுறி கண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மரக் கடத்தல் என்பனவற்றை இராணுவத்தினர், மற்றும் பொலிஸார் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
புத்துவெட்டுவான் கிராமத்தில் இருந்து மணல் மற்றும் மரங் கள் கொண்டு செல்லப்படும் போது கொக்காவில் இராணுவ முகாம் பகுதியில் இராணுவத் தால் தடுக்க முடியும். ஐயன் கன்குளம் வழியாக துணுக்காய் நோக்கி மணல் மற்றும் மரங்க ளைக் கொண்டுசெல்லும்போது, ஆலங்குளம் இராணுவ முகாமில் தடுக்க முடியும். பழைய முறிகண்டி கிராமத்தில் இருந்து வெளியிடங்க ளுக்கு மணல் மற்றும் மரங்களை எடுத்துச்சென்றால் கோட்டைகட்டி யகுளம் விடந்தை இராணுவ முகாம் பகுதியில் தடுக்க முடியும். ஆனால் மணல், மரக் கொள்ளை



யர்கள் இராணுவ முகாம்களைத் தாண்டியே அவற்றைக் கொண்டு செல்கின்றனர். பொதுமக்களால் இராணுவத்துக்கு தகவல் வழங்கப் படும்போதும் இராணுவத்தினர் அவற்றைத் தடுப்பதில்லை.
கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி கிராமங்களில் தொடர்கின்ற இவ்வா றான சட்டவிரோத செயற்பாடுக ளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆலங் குளம், கோட்டைகட்டியகுளம் மற் றும் கொக்காவில் ஆகிய பகுதி களில் இராணுவம் மற்றும் பொலிஸ் இணைந்த காவல ரண்கள் அமைக்கப்பட வேண் டும் என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்து வரு கிறோம். எனினும் அது நடை பெறவில்லை. தொடரும் மணல் அகழ்வாலும், மரங்களை அழிப் பதாலும், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் மற் றும் மருதங்குளம் ஆகியவற் றின் கீழான விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே சம்பந் தப்பட்டவர்கள் இது தொடர்பில் நட வடிக்கையை முன்னெடுத்து எமது கோரிக்கையை பரிசீலனைசெய்ய வேண்டும் - என்றனர். (ப-13)



# முல்லைத்தீவு பாலங்குளத்தை உடன் சீரமைப்புச் செய்யுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 26
முல்லைத்தீவு பாலங்குளத்தின் வாய்க்காலைச் சீர மைக்குமாறு குளத்தின் கீழான பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர்.
இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவிக் கையில்;
கமநல சேவைகள் நிலையத்தால் கடந்த 5 ஆண்டு களுக்கு முன்னர் குளத்தின் பிரதான வாய்க்கால் இருபக்கங்களிலும் கொங்கிறீட்டிலான வாய்க்காலாக அமைக்கப்பட்ட போதிலும் குறித்த வாய்க்காலின் ஒரு பக்கம் 150 மீற்றர் வரை உடைந்து வீழ்ந்துள்ளது. குறித்த வாய்க்காலைச் சீரமைத்துத்தருமாறு நாம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவருகிறோம். இதேவேளை பாலங்குளத்தின் அணைக்கட்டையும் உயர்த்தி அதன் கீழான வாய்க்கால்களையும் சீரமைக் குமாறு கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் தொடர்ச் சியாக கோரிக்கைவிடுத்து வரும் நிலையில் குளத்துக் கான வேலைகள் இடம் பெறவில்லை. ஆரம்பத்தில் அணைக்கட்டுப் பகுதியில் மிதிவெடிகள் உள்ளன என காரணங்கள் கூறப்பட்டன.
தற்போது மிதிவெடிகள் அகற்றப்பட்ட நிலையில் சீர மைப்பு வேலைகள் நடைபெறவில்லை. இக்குளம் முழுமையாகச் சீரமைக்கப்படுமானால் 100 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் - என்றனர். (ப-13)

# கிராமத்தின் உள்ளக வீதிகளை சீரமைத்துத் தருக

## மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,மே 26
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக் கணை முசுரம்பிட்டி பகுதியின் உள்ளக வீதிகளை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர் கள் மேலும் தெரிவிக்கையில்;
குறித்த கிராமத்தில் 90 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள உள்ளக வீதிகள் பல சீரமைப்பு இன்றிக் காணப்படுகின்றன.
மழை காலங்களில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் பெரிய வர்கள் பிள்ளைகளை தூக்கிச் சென்று முதன்மை வீதியில் கொண்டுசென்று விட்டு மீண்டும் திரும்ப வேண்டிய நிலை காணப் படுகிறது.
அதுமட்டுமின்றி கல்மடு குளத்தை ஊடறுத்து பாய்கின்ற மழை வெள் ளம் எமது கிராமத்தின் ஊடாகவே அதிகளவு வெளியேற்றப்படுகி றது. இதன் காரணமாக நாங்கள் ஒவ்வொரு வருடமும் வெள்ளத் தால் பாதிக்கப்படுகின்றோம்.
இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை

# வீதியோர வியாபாரத்தை தடைசெய்தது வவு. நகரசபை

## பொருள்களையும் அள்ளிச் சென்றது

வவுனியா, மே 26
வவுனியா நகரப் பகுதியில் வீதி யோர வியாபார நடவடிக்கைக ளுக்கு வவுனியா நகர சபை யால் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தாக்கத்தை கருத் திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



வவுனியா நகரப் பகுதியில் வீதி யோர வியாபார நடவடிக்கை யில் ஈடுபடுவதற்கு நகர சபை யால் தடை விதிக்கப்பட்ட நிலை யில் நகர சபையின் தடை உத்த ரவை மீறி வீதியோர வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட நபர்க ளுக்கு எதிராக நகர சபையினர் விசேட நடவடிக்கையை முன் னெடுத்திருந்தனர். இதன் போது வீதியோரத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நபர்களின் மரக்கறிகள், பொருள்களை நகரசபையினர் ஏற்றிச்சென்றதுடன் அவர்க ளுக்குத் தண்டப்பணமும் விதித் தனர். வீதியோரத்தில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் மரக்கறிகள் பல பாவனைக்கு ஒவ்வாத வகையில் அழுகிய நிலையில் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-18)

# குடிதண்ணீர்க் கிணறு அமைப்பு

கிளிநொச்சி,மே 26
பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்திசெய்யும் முகமாக இத்தாவில் பகுதியில் குடிதண்ணீர்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட 0.4 மில்லியன் ரூபா நிதியின் மூலம் இந்தக் கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பிரதேச சபையால் முகமாலை உப அலுவலக பிரிவுக்குள் உள்ள கிளாலி, இந்திரா புரம், முகமாலை, வேம்போடுகேணி, இத்தா வில் மற்றும் கச்சார்வெளி ஆகிய கிராம மக்கள் இதன் மூலம் நன்மையடைவர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-6)



# கரைதுறைப்பற்று பிரதேசத்தில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துக

## கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 26
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கால்நடைக ளைக் கட்டுப்படுத்துமாறு பாதிக்கப்பட்ட பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக் கையில்; முல்லைத்தீவு நகரம், முள்ளிய

ளில் கால்நடைகளின் தொல்லை அதிகரித் துள்ளது. கால்நடைகள் வீதிக்கு வருவ தைக் கட்டுப்படுத்துமாறு பொலிஸாரால் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் விடுக்கப் பட்டபோதிலும் விபத்துகள் ஏற்படக் கூடிய வகையில் கால்நடைகள் வீதிக்கு வருகின் றன. கால்நடைகளைக் கட்டுப்படுத்த

பிரதேச சபைக்கு உள்ள போதும், அவற் றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை பிரதேச சபை எடுக்கவில்லை. இத னால் அதிகமான வீதி விபத்துகள் ஏற்படு கின்றன. எனவே கரைதுறைப்பற்று பிர தேச சபை கால்நடைகளைக் கட்டுப்படுத்து வதற்கு இறுக்கமான நடவடிக்கைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுக் கடன் இனியும் வேண்டாம்

*ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 26
வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்று, இனியும் நாட்டில் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படக் கூடாது என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை வெளிநாட்டு கடன் வலைக்குள் சிக்க வைக்காது, அபிவிருத்தித் திட்டங்களுக்கு உள்ளூரிலேயே நிதித் திரட்டப்பட வேண்டும்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து இலங்கை மேலும் பல உதவிகளை எதிர்பார்த்துள்ளது. உணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு என்பவற்றிலிருந்து மீள்வதற்கு விவசாயத்திலிருந்து உடனடி மாற்றங்கள் வர வேண்டும். விவசாயம், கால்நடை, மீன்பிடி ஆகிய துறைகள் தொடர்பில் சிந்தித்து, உலகின் பல நாடு களில் உணவுத் தேவை காணப்படுவதால், இவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றார். (எ-4)

# பயணக் கட்டுப்பாடுகளை மீறுகின்றனர் யாழ். மக்கள்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 26**

**பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டாலும், யாழ்ப்பாண மக்களுடைய ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என்று யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்புச் செயலணியின் இணைப்பாளர் என்ற ரீதியில் யாழில் தற்போதுள்ள கொரோனா நிலைமை தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசிய நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது கொரோனாத் தொற்றானது ஏனைய இடங்களோடு ஒப்பிடும்போது, கட்டுப்பாட்டில் உள்ளது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் கொரோனா முதலாவது அலையில் 17 தொற்றாளர்களும், இரண்டாவது அலையில் 890 தொற்றாளர்களும் தற்போதுள்ள மூன்றாவது அலையில் ஆயிரத்து 398 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் யாழ். மாவட்ட கொரோனா தடுப்புச் செயலின் இணைப்பாளர் என்ற அடிப்படையிலும் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி என்ற அடிப்படையிலும் யாழில் கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு பட்ட செயற்பாடுகளை இராணுவத்தினரின் மூலம் முன்னெடுகின்றோம் எனினும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்தோடு அரசால் தற்பொழுது கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனினும் பொதுமக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை. யாழ்ப்பாண மாவட்ட மக்கள் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் தேவையற்று வீதிகளில் நடமாடாது வீடுகளில் இருக்கவேண்டும். அத்தோடு உங்களுக்கு ஏதாவது கொரோனா நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுங்கள். அவ்வாறு செயற்படுவதன் மூலம் உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார். (ப)



## நளின் பண்டாரவுக்கு கொரோனாத் தொற்று

*சஜித்தால் பரவியதா?*

கொழும்பு, மே 26
ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹ கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். அவர் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனக்கும், என் மனைவிக்கும் கொவிட் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அண்மைய நாள்களில் என்னைச் சந்தித்தவர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும், அவரது மனைவிக்கும் சில நாள்களுக்கு முன்னர் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## ஆணொருவரின் சடலம் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி, கோவிந்தன் கடைச் சந்தி, இரணைமடு நீர்ப்பாசன வாய்க்காலில் ஆண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி - திருவையாறு வில்சன் வீதியைச் சேர்ந்த கே.ரமேஸ்குமார் (வயது 30) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர், தனியார் வீதி அபிவிருத்தி நிறுவனம் ஒன்றில் வீதி சீரமைப்பு பணியில் ஈடுப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குளிப்பதற்காக வாய்க்காலில் இறங்கியபோது உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டனர். (ப-113)




## சிதைவடைந்த நிலையில் மன்னாரில் சடலம் மீட்பு

மன்னார், மே 26
மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள தாழ்வுபாடு கடற்கரையை அண்மித்த பகுதியில், சிதைவடைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை குறித்த கடற்கரை பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த பகுதிக்குச் சென்ற சட்ட மருத்துவ அதிகாரி சடலத்தை பார்வையிட்டதோடு, சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொள்ள மன்னார் மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (ப-56)

## தடுப்பூசிக்கு திரண்டவர்களால் கொழும்பில் பெரும் குழப்பம்

கொழும்பு, மே 26
இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளை வழங்கக்கோரி கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் நேற்றுக் காலை மக்கள் குழுமியதால் அங்கு குழப்பமான சூழ்நிலை நிலவியது. அஸ்ராஜெனெகா தடுப்பூசியை வழங்கவேண்டும் என்று கோரி 3 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் காத்திருந்த வேளையே குழப்பமான நிலை உருவானது.

மருத்துவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசி லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் வழங்கப்படவுள்ளது என வெளியான தகவலாலேயே இந்தக் குழப்பநிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,இ)

## கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோது....






இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகள் நேற்றுக் காலை 4 மணியிலிருந்து இரவு 11 மணி வரை தளர்த்தப்பட்டிருந்தன. இதன்போது மக்கள் வாகனங்களில் வர்த்தக நிலையங்களுக்குச் செல்ல முடியாது என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் மக்கள் அத்தியவாசிய பொருள்களைக் கொள்வனவு செய்து இவ்வாறு தள்ளுவண்டில்களில் வைத்துத் தள்ளிச் கொண்டு சென்றதை நாட்டின் பல பகுதிகளிலும் காணக் கூடியதாக இருந்தது. அதேபோன்று எரிவாயு சிலிண்டர்களை இருவர் இணைந்து காவிச் சென்றதையும் காண முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரோடையில் வீழ்ந்து 2 வயதுச் சிறுமி சாவு

திருகோணமலை, மே 26
நீரோடையில் வீழ்ந்து இரண்டு வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிராஜ் நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த ஏ.அகிலா என்ற சிறுமியே உயிரிழந்தவர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
வீட்டுக்கு முன்னால் உள்ள நீரோட்டத்தில் இருந்து விளையாடிய சிறுமியைக் காணவில்லை என சுமார் அரைமணி நேரம் தாய் தேடி அலைந்துள்ளார். இந்த நிலையில் குறித்த நீர் ஓடையில் இருந்து சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சிறுமியின் சடலம் தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-ஜ)

## கலப்பின அரிசியின் தந்தை காலமானார்

### சீனத் தூதரகம் இரங்கல்

கொழும்பு, மே 26
கலப்பின அரிசியின் தந்தை என்று அழைக்கப்படும் யுவான் லாங்பிங் காலமானார் என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
அவரது மறைவுக்கு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் இரங்கல் தெரிவித்துள்ளது.
யுவானின் கடின உழைப்புக் காரணமாக, சீனாவின் மொத்த அரிசி உற்பத்தி 1950ஆம் ஆண்டில் 56.9 மில்லியன் தொன்னிலிருந்து 2017 ஆண்டில் 194.7 மில்லியன் தொன்னாக உயர்ந்தது.
கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 300 பில்லியன் கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வருடாந்த அதிகரிப்பு 60 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு உணவளிக்கப் போதுமானதாக இருந்தது என்று இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-4)

## வேடிக்கை பார்த்த பொலிஸார் கைது



கொழும்பு.மே 26
இருவர் மோதிக் கொண்ட சம்பவத்தைக் கண்டும் காணாதது போன்று வேடிக்கை பார்த்த குற்றச்சாட்டில், பொலிஸார் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வெலிகம பிரதேசத்தில் நடந்துள்ளது.
பஸ் சாரதி ஒருவர் அங்கிருந்த மற்றொரு நபரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். சம்பவ இடத்திலிருந்த பொலிஸார் இருவர் அதனை வேடிக்கை பார்த்துள்ளனர். தாக்குதலைத் தடுக்கத் தவறியுள்ளனர். இது தொடர்பான சி.சி.ரி.வி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில், பொலிஸார் இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் மாத்தறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-4)

# பாணியை நம்பியதால் நாட்டுக்கு கெடுகாலம்

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, மே 26**
**கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியைச் செலுத்தும் பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு நாங்கள் பலமுறை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அரசு தேசிய மருத்துவத்தின்மீது நம்பிக்கை வைத்து, பாணியொன்றின் பின்னால் சுற்றித்திரிந்தது. இதனால் இன்று அதிக அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.**

கண்டியில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையொன்றை இந்த அரசு மேற்கொண்டிருக்காமையே, இன்றைய இந்த நிலைமைக்குக் காரணம். இதற்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்.
இன்றுள்ள நிலைமையில், நாட்டைத் தற்காலிகமாக முடக்குவதே, தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழியாகும். விசேட மருத்துவ நிபுணர்கள் கூறுவதைக் கேட்டு, நாட்டை முடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ- 4)

## மர்மமான பெட்டியுடன் பயணித்த பொலிஸார்

### சமூக வலைத்தளத்தில் வைரல்

கொழும்பு, மே 26
போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் இருவர், மர்மமான பெட்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் ஒளிப்படம், சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.
உயர் ரக மதுபானங்கள் எடுத்துச்செல்லும் வகையில் அந்தப் பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், எவ்வகையான போத்தல்கள் அடுக்கப்பட்டிருக்கும் என்றும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கின்றது என்பது தொடர்பில் எவருக்கும் தெரியாது.
இந்தப் படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. பெட்டி ஒருபோதும் வெறுமையாக இருக்காது என்று பலரும் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர். (எ-4)

## தீப்பற்றிய பேர்ல் கப்பல்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 26
கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்த நிலையில், தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தொடர்பில், நெதர்லாந்து விசேட நிபுணர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
இலங்கைக்கு வந்துள்ள நிபுணர்கள் குழு, கப்பலுக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தர்சனி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.
கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய, சம்பவ இடத்தில் பெற்றுக்கொண்ட மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல், இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படை, விமானப்படை மற்றும் துறைமுக அதிகாரசபையினர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகர சபை தவிசாளர் விபத்தில் உயிரிழப்பு

### மூவர் கைது

கொழும்பு.மே 26
புத்தளம் நகர சபைத் தவிசாளரும், முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல் பாய்ஸ் விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நகர சபைத் தவிசாளர் சிலருடன் ரால்மடமக் குளத்தில் குளித்துவிட்டு, வாகனத்தில் அமர்ந்து சென்று கொண்டிருந்தபோது, வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டோ அல்லது வேறு முறையிலோ விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கும் 6.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடந்துள்ளது.
இதனையடுத்து வாகனத்தை செலுத்திச் சென்றவர் மற்றும் வாகனத்தில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது.
மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு [illegible]



## 2,584 பேருக்கு எலிக் காய்ச்சல்

கொழும்பு, மே 26
இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 584 பேருக்கு எலிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.
அதற்கமைய, ஜனவரி மாதம் 496 பேருக்கும், மார்ச் மாதத்தில் 795 பேருக்கும், ஏப்ரல் மாதம் 704 பேருக்கும் எலிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரியில் 383 பேருக்கும், காலியில் 334 பேருக்கும், களுத்துறையில் 258 பேருக்கும் எலிக் காய்ச்சல்ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அலை விரைவில் வரும்

## அரசு அக்கறையற்று செயற்படுகிறது வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 26**

**கொவிட் - 19 தொற்று தொடர்பான இன்றைய அரசின் நிலைப்பாட்டால் மூன்றாவது அலையைத் தாண்டி, நான்காவது அலை ஏற்படும் அபாயமும் உள்ளது என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நாட்டில் கொவிட் தொற்றின் பாதிப்பு மிக மோசமான நிலையில் உள்ளது. சரியான நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்க அரசு தவறியமையே இதற்கு காரணமாகும். விமான நிலையத்தை கட்டுப்பாடின்றி திறந்து வைத்திருந்தமை, உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் வர அனுமதித்தமை. சித்திரைப் புத்தாண்டில் கட்டுப்பாடுகளை தளர்த்தி விட்டமை, தடுப்பூசிகளை ஏற்பாடு செய்யாமை என பல காரணங்களைக் கூற முடியும். இன்றைய நிலைமையால் மூன்றாவது அலையைத் தாண்டி, நான்காவது அலை ஏற்படும் என ஊகிக்கப்படுகின்றது. இந்த நிலைமையைத் தடுக்க நாட்டிலுள்ள சுகாதாரத் துறை சார்ந்த பிரதான நான்கு அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை முன்வைத்திருக்கின்றன. நாட்டை குறைந்த பட்சம் 14 நாள்களுக்கு முடக்குமாறும், மக்கள் நடமாட்டத்தை முழுமையாக அக்காலப்பகுதியில் தடுக்குமாறும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதுவே சர்வதேச ரீதியான சில ஆய்வுகளின் ஆலோசனையாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதியோ கொவிட் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியோ இதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை. இதற்குப் பதிலளிக்கும் வகையில், நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், நாட்டை ஒரு நாளைக்கு மூடி வைத்தால் ரூபா 140 கோடி இழப்பு ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு பார்த்தால் கூட பதின்நான்கு நாள்களுக்கு ரூபா ஆயிரத்து 960 கோடியே இழப்பு ஏற்படும். அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சீனி மோசடியில் மட்டும் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா ஆயிரத்து 950 கோடி என எல்லோருக்கும் தெரியும்.

இன்றைய அரசு நாட்டு மக்களின் உயிர்களை லட்சங்களிலும், கோடிகளிலும் கணக்குப்பார்க்கும் நிலையிலேயே உள்ளது. நாட்டு மக்களின் உயிர்களை அலட்சியமாகப் பார்க்கும் அரசாக மாறியுள்ளது. லட்சங்கள், கோடிகளை எப்போதும் உழைத்துக்கொள்ள முடியும். மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை எப்போதும் மேன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் இழந்த உயிர்களை மீளப்பெற்றுக் கொள்ள முடியாதென்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். நாட்டு மக்களே நாட்டின் பிரதான சொத்து என்பதை புரிந்துகொண்டு ஜனாதிபதியும், கொவிட் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியும் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-ப)

### 24 நாள்களில் 56,055 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, மே 26

நாட்டில் கடந்த முதலாம் திகதி முதல் 24ஆம் திகதி காலை வரையான காலப் பகுதிக்குள் மட்டும், 56 ஆயிரத்து 55 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கொழும்பு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 954 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 525 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 6 ஆயிரத்து 904 பேருக்கும், காலி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 859 பேருக்கும், குருநாகல் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 34 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 403 பேருக்கும், இரத்தினபுரி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 173 பேருக்கும், நுவரெலியா மாவட்டத்தில் ஆயிரத்து 904 பேருக்கும், மாத்தறை மாவட்டத்தில் ஆயிரத்து 643 பேருக்கும், அநுராதபுரம் மாவட்டத்தில் ஆயிரத்து 620 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் ஆயிரத்து 390 பேருக்கும், கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 353 பேருக்கும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 179 பேருக்கும், புத்தளம் மாவட்டத்தில் ஆயிரத்து 160 பேருக்கும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆயிரத்து மூன்று பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


அதேவேளை ஏனைய மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4.44)

### தொற்று நோயியல் பிரிவு

# மருத்துவர்களிடையே இணக்கப்பாடில்லை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 26



சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவுக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர்களிடையே இணக்கப்பாடில்லை. 10 மருத்துவர்களில் மூவர் மட்டுமே முடிவுகளை எடுக்கும் நிலைமை உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.


இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று தொடர்பான உத்தியோகபூர்வத் தரவுகளை தொற்றுநோயியல் பிரிவு வெளியிட வேண்டும். ஆனால் அவர்களிடையே இணக்கப்பாடில்லை. அனைத்து முடிவுகளையும் தாமே எடுக்க வேண்டும் என்று 3 மருத்துவர்கள் மட்டும் இணைந்து செயற்படுகின்றனர். அவர்கள் ஏனைய மருத்துவர்களுடன் இணக்கமாகச் செயற்படுவதில்லை.

இது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் 14 நாள்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும், மருத்துவர்களிடையே இணக்கப்பாடில்லாத காரணத்தாலேய இழுபறியில் உள்ளது. தொற்றுநோயியல் பிரிவு தரவுகளை சரிவர சமர்ப்பிக்கத் தவறியமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது- என்றார். (ம-4)

### ஆயுதக் களஞ்சிய வழக்கு; சேனாதிபதி விடுவிப்பு

கொழும்பு, மே 26



சட்டவிரோதமாக மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தைப் பராமரித்தமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து, அவன் கார்ட் கடல்சார் சேவைகளின் தலைவர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காலி துறைமுகத்துக்கு அருகில் மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையை நடத்திச் சென்றமை மற்றும் அனுமதியின்றி ஆயுதங்கள் மற்றும் ரவைகளை வைத்திருந்தமை உள்ளிட்ட 7 ஆயிரத்து 573 குற்றச்சாட் டுக்களுடன், 13 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா 2019 ஆம் ஆண்டு வழக்குப் பதிவுசெய்தார்.

இருப்பினும், சட்டமா அதிபர் தாக்கல் செய்த குற்றச்சாட்டுகளில் 19 மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முன்வைக்க முடியும் என்று உயர் நீதிமன்ற ஆயம் தீர்மானித்தது. இந்நிலையில் தற்போது கொழும்பு விசேட மேல்நீதிமன்றம் வழக்கின் பிரதிவாதிகளை விடுதலைசெய்துள்ளது. (எ-4)

## பிரஸ் பேர்ள் கப்பலில் அடங்க மறுக்கிறது தீ

கொழும்பு, மே 26

கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே தீப் பற்றியுள்ள எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்த கொள்கலன் ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது. இந்தக் கப்பலில் கடந்த வியாழக்கிழமை தீப் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில், நான்கு நாள்கள் கடந்தும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதேநேரம் கப்பலில் இருந்த 25 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். கப்பலில் இருந்த பணியாளர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கப்பலில் இருந்து எட்டுக் கொள்கலன்கள் கடலில் விழுந்துள்ளன. அதையடுத்து கடற்பகுதியைப் பாதுகாப்பதற்காக மேலும் 50 கடல் மைல் தூரத்துக்கு கப்பலை நகர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மக்கள் கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என்றும், கடலில் மிதந்து வரும் பொருள்களைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி இந்தியாவின் ஹசிர துறைமுகத்தில் ஏற்றப்பட்ட 25 தொன் நைட்ரிக் அமிலம் மற்றும் பிற இரசாயனங்கள் உட்பட ஆயிரத்து 486 கொள்கலன்களை இந்தக்கப்பல் ஏற்றிச்சென்றது. அபாயகரமான சரக்குகளின் வேதியியல் எதிர்வினை காரணமாக தீப் பரவல் ஆரம்பித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியத் திரிபு வைரஸால் மன்னாருக்கு அச்சுறுத்தல்!

### கஞ்சா கடத்தல்களால் நுழையும் அபாயம்

**மன்னார், மே 26**

**இந்தியாவிலிருந்து மன்னாருக்கு கடத்திவரப்படும் கேரளக் கஞ்சாவால், மன்னாருக்குள் இந்தியத் திரிபு வைரஸ் ஊடுருவக்கூடிய பேராபத்தான நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

இந்தியாவில் பரவிவரும் கொரோனாத் தொற்று மன்னாருக்குள் நுழையாதவாறு மன்னாரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களுடன் மன்னார் மீனவர்களுக்கு உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களை அழைத்துவருவதும் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இந்தியாவிலிருந்து மன்னாருக்கு கேரளக் கஞ்சா கடத்தப்படுவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடத்தப்படும் கஞ்சாவின் மூலம் கொரோனா மன்னாருக்குள் நுழையும் அபாயம் உள்ளது என்று மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். எனவே இந்த கஞ்சா கடத்தல் தொடர்பில் பொலிஸார், மற்றும் கடற்படையினர் தீவிரமாகச் செயற்பட்டு, மக்களை கொரோனா வைரஸில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். (ப-60)



## சந்தை வளாகம் தொற்றுநீக்கம்

முல்லைத்தீவு,மே 26

முல்லைத்தீவு தண்ணீரூற்று சந்தை வளாகப் பகுதி நேற்றுமுன்தினம் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. முள்ளிய வளையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இரண்டு கிராமங்கள் தொடர்ச்சியாக முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தண்ணீரூற்று சந்தை பகுதியில் அதிகளவான மக்கள் கூடுவதால் அதனை சுத்தம் செய்து தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினரால் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ-19)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: 10 பேருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு நாகர்வட்டைக் கடற்கரையில், நீதிமன்ற தடை உத்தரவை மீறி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஸ்டித்த 10 பேருக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. லவக்குமார் என்பவர் கடந்த 18 ஆம் திகதி 10 பேருடன் சென்று, நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி, கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

குறித்த நிகழ்வை முகநூலிலும் பதிவேற்றம் செய்துள்ளனர். இதனை அறிந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்து, நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று மூன்று நாள்கள் தடுப்பு காவலில் வைத்திருந்தனர்.

அவர்களை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தினர். வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (எ-4)

## மன். பொலிஸாருக்கு கொரோனாத் தடுப்பூசி

மன்னார், மே 26

மன்னார் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸாருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஒழுங்கமைப்பில் கடந்த மாதம் முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட 51 பொலிஸாருக்கே நேற்று முன்தினம் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நாடளாவிய ரீதியில் பயணத் தடை முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், சுகாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு கொரோனாத் தடுப்பூசி பொலிஸாருக்கு ஏற்றப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் இதுவரை 82 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)

## முல்லை. கொரோனா மருத்துவமனைக்கு கட்டில்கள், மெத்தைகள் கையளிப்பு

முல்லைத்தீவு, மே 26

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு தனியார் நிறுவனம் ஒன்றால் கட்டில்களும் அதற்கான மெத்தைகளும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவுகளை நடத்திச் செல்வதற்கு வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து வோஸ் ஏரிய பெடரேசன் நிறுவனத்தால் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பத்து கட்டில்களும் அதற்கான மெத்தைகளும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் வைத்து நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் அ.ஸ்டெவினால் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

அவை பின்னர் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-19)

## கர்ப்பிணிகளை அடுத்து சிறுவர்களுக்கும் ஆபத்து

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, மே 26

இலங்கையில் கொரோனாத் தொற்றால் கர்ப்பிணிகள் அதிகம் பாதிப்பை எதிர்கொண்டு வந்த நிலையில், தற்போது அடுத்த கட்டமாக சிறுவர்கள் கடும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் எம். பாலசூரிய தெரிவிக்கையில்,

இலங்கையின் பல பகுதிகளிலுள்ள கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

ஆரம்பத்தில் சிரேஷ்ட பிரஜைகளுக்கே கொரோனாத் தொற்றானது கணிசமாகப் பரவியது. இருப்பினும் தற்போது கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது. கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் திட்டவட்டமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

சிறுவர்களை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

இரண்டு வயதுக்கும் குறைவான சிறுவர்கள் முகக்கவசம் அணிந்துகொள்வது சிரமமாகும்.

ஆகையால் பெற்றோர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறுவர்களின் கைகளை அடிக்கடி சுத்தம்செய்ய வேண்டும். சிறுவர்களை சனநெரிசல் மிக்க இடங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டாம் - என்றார். (எ-4)



## கோவிட் சிகிச்சை நிலையங்களாக 50 ஆயுள்வேத வைத்தியசாலைகள்

கொழும்பு,மே 26

நாடளாவிய ரீதியில் உள்ள 50 ஆயுள்வேத வைத்தியசாலைகளை, கோவிட் இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆயுள்வேத வைத்தியசாலைகளை கோவிட் சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதன் ஊடாக, சுமார் 3 ஆயிரத்து 500 கட்டில்களை கோவிட் நோயாளர்களின் சிகிச்சைக்காக பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வைத்தியசாலையில் சேவையாற்றுபவர்களுக்கு கோவிட் சிகிச்சை தொடர்பில் பயிற்சி வழங்கவும், அவர்களுக்கு உடனடியாக கோவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வருடங்களாக குடிசையில் வாழும் ஜிம்ரோன் நகர் மக்கள்

## வீட்டுத்திட்டம் முழுமைபெறாததால் இந்த நிலை

**மன்னார், மே 26**

**மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜிம்ரோன் நகர் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படாத நிலையில், தொடர்ந்தும் குடிசை வீடுகளில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
நாங்கள் மன்னார் ஜிம்ரோன் நகரில் வசிக்கின்றோம். இந்த இடத்துக்கு நாங்கள் வந்து கிட்டத்தட்ட 15 வருடங்கள் ஆகின்றன. இந்த பதினைந்து வருடங்களாக இதே குடிசை வீட்டில்தான் வசிக்கின்றோம். கடந்த ஆட்சியில் எமக்கு வீட்டுத்திட்டம் தந்தார்கள். அந்த வீட்டுத் திட்டம் முழுமை அடையாமல் அத்திபாரத்துடன் நிற்கின்றது. நாங்கள் கடனாளிகளாகி தெருவில் நிற்கின்றோம்.
ஓலைக்குடிசைகளில் வாழும் நாங்கள் சாகும் வரை ஓலைக் குடிசைகளில் தான் வாழவேண்டுமா?.
இந்த கொரோனாத் தொற்றுக் காலத்தில் தனிமைப்படுத்துங்கள் என்று கூறுகின்றார்கள். இந்த சிறிய ஓலைக் குடிசையில் எவ்வாறு நாங்கள் தனிமைப்படுத்தி சமூக இடைவெளியைப் பேணுவது. எத்தனையோ ஆர்ப்பாட்டங்களைச் செய்துவிட்டோம் பதில் தருகின்றோம் என காலத்தைக் கடத்துகிறார்களே தவிர அதற்கான முழுமையான தீர்வுகளை எமக்குத் தரவில்லை. மன்னார் மாவட்டச் செயலர் நேரில் வந்து எம்மை பார்வையிட்டு அதற்கான தீர்வைத் தரவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். வாக்கு கேட்பதற்காக மட்டுமே அரசியல்வாதிகள் இங்கு வருகின்றார்கள். மழை, புயல் நேரங்களில் ஒரு போதும் அவர்கள் வந்து எம்மைப் பார்வையிடுவதில்லை.
வீட்டுக்குள் முழங்காலுக்கு மேல் தண்ணீர் நிற்கும் குடிசைகள் எல்லாம் காற்றில் சரிந்து கீழே கிடக்கும். பிள்ளைகளைக் கட்டில்களுக்கும், கதிரைகளுக்கும் மேலே இருத்தி பாதுகாத்து வந்துள்ளோம்.
எந்தவொரு அரசியல்வாதிகளும் கண்டுகொள்வதில்லை.
எனவே அவர்கள் இப்போதாவது எமது பிரச்சினைகளை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி, வீட்டுத் திட்டங்கள் உட்பட எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்- என்றனர். (ப-213)



## உயிருக்குப் போராடும் யானை சதுப்பு நிலத்தில் இருந்து மீட்பு

வவுனியா,மே 26
துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், நீண்ட நாள்களாக உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த யானை சதுப்பு நிலத்திலிருந்து மேற்பரப்புக்கு கொண்டுவரப்பட்டது.
வவுனியா புளியங்குளம் புதூர் காட்டு பகுதியில் கடந்த 14ஆம் திகதி குறித்த யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது.
இதனால் காயமடைந்த யானைக்கு இராணுவத்தினர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கிராம மக்கள் ஆகியோரின் உதவியுடன் கால்நடை மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. கடந்த 11 நாள்களாக காயப்பட்ட சதுப்பு நிலத்தில் வைத்தே யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும் நேற்றுமுன்தினம் மாலை அங்கிருந்து வெளியே மீட்கப்பட்டு, மேற்பரப்புக்கு கொண்டு வரப்பட்டு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (ப-110)


## தொற்றுக்குள்ளான கைதி தப்பியோட்டம்

கொழும்பு, மே 26
பூஸா சிறைச்சாலையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார் என்று சிறைச்சாலைகள் அலுவலகம் நேற்றிரவு தெரிவித்துள்ளது. குறித்த கைதியைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸாருடன் இணைந்து சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே இரு சிறைச்சாலைகளிலிருந்து கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதிகள் சிலர் தப்பியோடியிருந்தனர். அவர்கள் பின்னர் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## மாரடைப்பால் உயிரிழந்தவர் கொவிட் தொற்றாலும் பீடிப்பு

### பி.சி.ஆர். அறிக்கையில் உறுதி

வவுனியா,மே 26
வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயிரிழந்த நபருக்கு கொவிட் தொற்று பீடித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



குறித்த நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சுகவீனம் காரணமாக நெடுங்கேணிப் பகுதியில் இருந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார்.
எனினும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாகவே அவர் உயிரிழந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (110)

## கொரோனா இறப்பு 1,269ஆக உயர்வு!

கொழும்பு, மே 26
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 28 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,269ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)



## மீட்கப்படாத நிலையில் கைக்குண்டு, எறிகணை

### பொலிஸார் அசமந்தம்

பளை, மே 26
காணிகளைத் துப்புரவாக்கும்போது வெடிக்காத நிலையில் காணப்பட்ட கைக்குண்டு மற்றும் எறிகணை ஆகியவை தொடர்பாக அயலில் உள்ள வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனத்துக்கும், பொலிஸாருக்கும் அறிவித்தும், இதுவரை அந்த வெடி பொருள்கள் அகற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பளை இந்திராபுரம் கிராமத்தில் கடந்த 9ஆம் திகதி காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய காணிகளைத் துப்புரவு செய்துள்ளனர். இதன்போது ஒரு காணிக்குள் கைக்குணடு ஒன்றும், மற்றும் ஒரு காணிக்குள் எறிகணையும் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக அயலில் உள்ள வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களும் வெடிபொருள்களை வந்து பார்வையிட்டுள்ளனர். வெடிபொருள்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.
பொலிஸாருக்கு தெரியப்படுத்தியபோதும், இதுவரை அந்த வெடிபொருள்கள் அகற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெடிபொருள்கள் அகற்றப்படாததால், காணிகளுக்குள் சென்று, அங்கு நடப்பட்டுள்ள தென்னங் கன்றுகளுக்கு நீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ப-9)



## சக்கர நாற்காலி கையளிப்பு

காங்கேசன்துறை, மே 26
எழுந்து நடமாட முடியாத உடுவில் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கு சக்கர நாற்காலி ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது. காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில், நீர்கொழும்பு ஒறியன்ற் லயன்ஸ் கழக பிரதிநிதி லயன் பிளசீடஸ் பீற்றரால் வழங்கப்பட்ட சக்கர நாற்காலியை கழகத்தின் தலைவர் லயன் கலாநிதி கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில் சென்ற உறுப்பினர்கள் உரியவரிடம் வழங்கினார். (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கப் புலிகளின் வேட்டைக்கு இரையாகியது இலங்கை அணி

## வரலாற்று வெற்றியாகவும் பதிவானது



டாக்கா, மே 26
இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றி பெற்றது பங்களாதேஷ் அணி. இந்த வெற்றியை அடுத்து வரலாற்றில் முதல் முறையாக இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரொன்றை பங்களாதேஷ் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து இலக்குகளையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. 15 ஓட்டங்களுக்கு இரு இலங்குகுளை பங்களாதேஷ் இழந்தது. எனினும் ரகிமின் நீண்ட - பொறுப்பான ஆட்டத்தால் 246 என்ற கௌரவ நிலையை பங்களாதேஷ் அடைந்தது. ரகிம் 125 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் சன்டகன், சமீர இருவரும் தலா 3 இலக்குகளையும், உதான 2 இலக்குகளையும், ஹசரங்க ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி பொலு பொலுவென சீரான இடைவெளியில் இலக்குகளைப் பறிகொடுத்து 40 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெறும் 149 ஓட்டங்களைப் பெற்றது. மழை குறுக்கிட்டதையடுத்து 103 ஓட்டங்களால் வென்றது பங்களாதேஷ். ஆட்ட நாயகனாக ரகிம் தெரிவானார். (ம)




# நேற்று 2,706 தொற்று

கொழும்பு, மே 26
நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 706 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 878ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 504ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 131ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

# வடக்கு மாகாணத்தில் 70 கி.மீ வேகத்தில் காற்று

யாழ்ப்பாணம், மே 26
வங்கக்கடலில் யாஸ் என்ற புயல் தீவிரம் பெற்றுள்ள நிலையில், நாட்டின் பல பகுதிகளில் கடும் காற்று வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. கடும் காற்று வீசும் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் வடக்கு மாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களும் உள்ளன. இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவிக்கையில்:
வட மத்திய, வட மேற்கு மாகாணங்களிலும், கேகாலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும். இந்தப் பகுதிகளில் 70 கிலோமீற்றர் வரை காற்றின் வேகம் அதிகரிக்கும் என்றுள்ளது. (ம)

# பனை வீழ்ந்ததில் குழந்தை காயம்!

யாழ்ப்பாணம், மே 26
கடும் காற்றுக் காரணமாக, பனை மரமொன்று முறிந்து வீட்டுக்கு மேல் வீழ்ந்ததில் இரண்டரை வயதுக் குழந்தையொன்று காயமடைந்தது.
காரைநகர் சிவகாமி அம்மன் கோவில் வீதியில் நேற்று மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிரிபாலன் கஸ்மிலா என்ற குழந்தையே காயமடைந்தது. சம்பவம் இடம்பெற்றபோது குழந்தை வீட்டுத் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.
காயமடைந்த குழந்தை மீட்கப்பட்டு வலந்தலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. (ம-27,26)



# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
21 . 08 . 1991



ஆண்டவன் அடியில்
24 . 05 . 2021

## செல்வன் இராஜேந்திரம் யூட் பனன்

**(யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி முன்னாள் மாணவன், கணிதப்பிரிவு,க.பொ.த (உ.த),2010)**

இல.12/1, விதாலையார் வீதி, ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராஜேந்திரம் யூட் பனன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அகால மரணமானார்.
அன்னார் அமரர் இராஜேந்திரம் -பெனிக்னா பன்சி ஆகியோரின் அன்பு மகனும் தர்மிகா (கார்கில்ஸ் வங்கி, யாழ்ப்பாணம்), கீர்த்தனா (அமரர்), சௌமினி (MG Consultant) சிரோமினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குயின், டாலி, திலீபன், றீசா (ஜேர்மனி), சாந்தி (அமரர்), ஆகியோரின் பெறாமகனும், கிறிஸ்ரியன், சந்திரதாஸ், ஞாசியா, அரியநேசன் (அமரர்), மைக்கல் (கனடா), றேமன் பத்மரஞ்சினி ஆகியோரின் மருமகனும், எமில், பசில், சிசில், டெனில், துஷியந்தி, டினேஷ், அனுஷா, பானுஷா, கம்ஷா, மதுஷா, மிதுலா, அன்டர்சன், றெஹுட்சன், ஜனோர்த்தன், தர்ஷன், சாமின், ஜக்சன், கட்சன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், பெனி பயஸ், பியுமினா, டொமினிறா, லக்சன், கயானன், ஜெனிற்றன் ஆகியோரின் மைத்துனனும் எவ்லின், அமெந்திகா, அபிவர்ணி, திவ்வியதா, அஷ்விக், சுஸ்வின் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் சுகாதார விதிமுறைகளுக்கமைய இன்று (26.05.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**12/1, விதாலையார் வீதி,**
**ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி:**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இலங்கையில்...

இராஜாங்கத் திணைக்களம் தனது நாட்டு பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
எனவே அமெரிக்கப் பிரஜைகள், இலங்கைக்கு செல்வதை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளும்படி அந்த நாட்டு அரசாங்கம் நேற்று அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.
அந்த அறிக்கையிலேயே மேற்படி எச்சரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.
இதன்படி, சுற்றுலாப் பயணிகள் நடமாடும் இடங்கள், போக்குவரத்து நிலையங்கள், ஹொட்டல்கள் மற்றும் கலாசார உற்வசங்கள் என மக்கள் ஒன்று திரளுகின்ற இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் எனவும் அந்த இடங்கள் மிகவும் ஆபத்தானவை என்

## கிராம அலுவலரும்....

கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.
சம்பவத்தில் பூநகரி பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் நகுலேஸ்வரன், அவரது மனைவி சுனித்தா ஆகியோரே உயிரிழந்தனர்.
இவர்கள் சாவகச்சேரி பகுதிக்குச் சென்றுவிட்டு தமது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது பூநகரி ஜெயபுரம் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
எனினும் விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பான தெளிவான தகவல்கள் இல்லை. யானை தாக்கியிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபராக தமிழர் சஞ்ஜெய் இராஜரட்னம்



ஜனாதிபதியால் இன்று சட்டமா அதிபராக நியமிக்கப்படவுள்ளமையை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியாகின்றது.

நாடாளுமன்றப் பேரவை சஞ்ஜெய் இராஜரட்னத்தை சட்டமாஅதிபராக நியமிக்க கடந்த 21ஆம் திகதியன்று அனுமதியளித்தமையைத் தொடர்ந்து ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவால் சஞ்ஜெய் இராஜரட்னம் இலங்கையின் புதிய சட்டமாஅதிபராக இன்று நியமிக்கப்பட வுள்ளார்.

சஞ்;ஜெய் இராஜரட்னம் கடந்த 34 ஆண்டுகளாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றி வருகின்றார். இவர் சிரேஷ்ட சட்டத்தரணி சிவா இராஜரட்னத்தின் மகனாவார்.

அத்துடன் திருகோணமலையை பூர்வீகமாகக் கொண்ட இவரது தாத்தா டீ.இராஜரட்னம் அவர்கள் முடிக்குரிய வழக்கறிஞராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பி டத்தக்கது.

சஞ்;ஜெய் இராஜரட்னம் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். இவர் தனது சட்டக்கல்வியை இலங்கை சட்டக்கல்லூரியில் கற்று சிறப்புத் தேர்ச்சி பெற்று 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதியன்று உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் பெற்றுக்கொண்டார்.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரச சட்டவாதியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து 1998ஆம் ஆண்டு சிரேஷ்ட அரச சட்டவாதியாகப் பதவிஉயர்வு பெற்றார். பின்னர் 2005ஆம் ஆண்டு பிரதி சொலிசிற்றர் ஜெனரலாகவும், 2014ஆம் ஆண்டு மேலதிக சொலிசிற்றர் ஜெனரலாகவும், 2018ஆம் ஆண்டு சிரேஷ்ட மேலதிக சொலிசிற்றர் ஜெனரலாகவும் பதவி உயர்வுகளைப் பெற்றதுடன் 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பதில் சொலிசிற்றர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டின் சொலிசிற்றராகவும் பதவிப்பிரமாணம் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். அத்துடன் 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சஞ்ஜெய் இராஜரட்னம், லண்டன் குயின்ஸ் மேரி பல்கலைக்கழகத்தில் சட்ட முது மாணிப்பட்டத்தை சிறப்புத்தேர்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிபுரிகின்ற காலப்பகுதியில் மத்திய வங்கி, மொறட்டுவைப் பல்கலைக்கழகம், தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் சார் கல்வி அமைச்சு மற்றும் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு உட்பட பல்வேறு அரச நிறுவனங்களின் சட்ட ஆலோசகராகவும் திகழ்ந்துள்ளார். 2015ஆம் ஆண்டு சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் 2019ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்வி பேரவையின் உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்படுகின்ற போது சட்டவரைஞர் குழுவின் உறுப்பினராகவும் விளங்கியுள்ளார். சில விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் சட்டவிடயங்களைக் கையாண்டுள்ளார்.

2004ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை சட்டமாஅதிபர் திணைக்களத்தின் பெருநிறுவன (Corporation) பிரிவை மேற்பார்வை புரியும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

2005ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்கள் பிராதுப்பிரிவின் தலைமை உத்தியோகத்தராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். 2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான கோப்புக்களை கண்காணிக்கும் பிரிவுக்கு பொறுப்பானவராக கடமையாற்றிய அதே வேளை துரித கதியில் வழக்குகளை தாக்கல் செய்வதில் இவரது பங்களிப்பு அளப்பரியது. சட்டமாஅதிபர் திணைக்களத்தின் சிவில் பிரிவுக்கு பொறுப்பானவராகவும் இவர் பல ஆண்டுகளாக கடமையாற்றி வருகின்றார்.

இவர் 1997ஆம் ஆண்டிலிருந்து உயர்நீதிமன்றத்தில் பல்வேறு முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகளில் அரசை பிரதிநிதித்துவம் செய்து தோன்றியிருக்கின்றார். மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் எழுத்தாணை வழக்குகள் உட்பட

> இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டின் சொலிசிற்றராகவும் பதவிப்பிரமாணம் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். அத்துடன் 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல வழக்குகளிலும் தோன்றியிருக்கின்றார்.

நாடாளுமன்ற சட்டவரைவுகள் தொடர்பான விசேட தீர்மானத்தை மேற்கொள்ளும் வழக்குகளிலும் உயர் நீதிமன்றதத்தில் தோன்றியுள்ளார். மும்மொழி ஆற்றலும் சட்ட வல்லமையும் மிக்க இவர் ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, சுவீடன், சுவிட்சர்லாந்து, ஆஸ்ரியா, அவுஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் தெற்காசிய நாடுகள் உட்பட பல்வேறு சர்வதேச நாடுகளில் இடம்பெற்ற சட்ட மாநாடுகள் மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்று சட்டமா அதிபர் திணைக்களத்தையும் நமது நாட்டையும் பிரதி நிதித்துவம் செய்துள்ளமை விசேட அம்சமாகும்.

சஞ்ஜெய் இராஜரட்னத்தின் பாரியார் தர்மினி இராஜரட்னம் லங்கா (தனியார்) மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் துரைரெட்ணசிங்கத்துக்கு கூட்டமைப்பு 'சூம்' இல் அஞ்சலி

திருமலை, மே 26

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.துரைரெட்ண சிங்கத்துக்கு இணைய வழிமூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஏற்பாட்டில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

கருத்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் , செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், யோகேஸ்வரன், சாந்தி சிறீஸ்கந்தராசா, தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சருமான மருத்துவ கலாநிதி சத்தியலிங்கம் , கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, அமரர் இரா.துரை ரெட்ணசிங்கத்துடன் கல்விப்பணி செய்தவர்கள் மற்றும் அவர்களது மாணவர்கள் எனப் பலரும் வழங்கினர். அஞ்சலி நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினர் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-20,26)

## போராட்டப் பந்தலின் கீழ் முறிந்து வீழ்ந்தது மரம்

### எவருக்கும் சேதமில்லை

வவுனியா,மே 26

கடும் காற்றுக் காரணமாக வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பகுதியில் பெரிய மரக்கிளை ஒன்று நேற்று முறிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பழமையான மரத்தின் கிளையே இவ்வாறு முறிந்து வீழ்ந்துள்ளது. குறித்த போராட்டப் பந்தலில் தாய்மார்கள் சிலர் இருந்த போதும் அதிஸ்டவசமாக எவருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-110)

